நவம்பர் 23, 2023

# விலங்குகளுக்கான சேவை பற்றிய புதிய உபசட்டத்திற்கு பிராம்ப்டன் நகர நிர்வாகம் ஒப்புதல் வழங்குகிறது

பிராம்ப்டன், ON –பல மாற்றங்களை அறிமுகப்படுத்தும் வகையில் அனைத்தையும் உள்ளடக்கிய விலங்குகளுக்கான சேவைகள் பற்றிய புதிய சட்டத்திற்கு பிராம்ப்டன் நகர் மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

விலங்குகளுக்கான சேவைகள் பற்றிய புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பதில், வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் மற்றும் வனவிலங்குகளைப் பராமரிப்பதிலும் பரஸ்பர செயல் புரிவதிலும் சிறந்த பழக்கவழக்க முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் குடியிருப்பாளர்கள் மற்றும் விலங்குகள் உட்பட சமூகம் முழுவதையும் பாதுகாக்கும் நகரத்தின் இயல்தன்மையை மேலும் அதிகரிக்கும்.

விலங்குகளுக்கான சேவைகள் பற்றிய புதிய துணைச் சட்டமானது, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் விலங்குகளின் நலன் தொடர்பாக நகரம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்

உடனடியாக அமலுக்கு வரும் விலங்குகளுக்கான சேவைகள் பற்றிய புதிய துணைச் சட்டத்தின் கீழாக, பின் வரும் மாற்றங்கள் அமலுக்கு வருகின்றன:

**விலங்குகளின் எண்ணிக்கை**

- ஒரு வீட்டில் அதிகபட்சமாக ஆறு விலங்குகளை வளர்க்க அனுமதிக்கப்படுகிறது; அதில் நாய்களின் எண்ணிக்கை மூன்று மட்டுமே இருக்க வேண்டும்.

**கொல்லைப்புறங்களில் வளர்க்கப்படும் கோழிகள் அல்லது புறாக்கள்**

- உங்கள் கொல்லைப்புறத்தில் இரண்டுக்கு மேற்பட்ட கோழிகள் அல்லது புறாக்கள் வளர்ப்பீர்களெயானால் நீங்கள் அதற்கான உரிமம் கொண்டிருக்க வேண்டும்.
- உங்களிடம் இரண்டு அல்லது அதற்குக் குறைவான எண்ணிக்கை இருப்பின் அதற்கான கூண்டு பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**வனவிலங்குகளுக்கு தீனியளித்தல்**

- வனவிலங்குகளுக்கு தீனியளித்தல் என்பது பிராம்ப்டன் நகரில் தடை செய்யப்பட்ட விஷயமாகும். வனவிலங்குகளுக்கு தீனியளித்தல் என்பது, அவை நம்மை அணுகுவதற்கும் மற்றும் மக்களிடையே உலாவுவதற்கும் வசதியமைத்துக் கொடுப்பது போலாகிவிடும்.

**நாய்களை அவற்றின் உரிமையாளரின் கட்டிடத்தில் கட்டுப்படுத்துதல்**

- தங்கள் கட்டிடத்திற்குள்ளாக கழுத்துப்பட்டை இல்லாமல் இருக்கும் விலங்குகள் அடைக்கப்பட்ட இடம், வேலியமைக்கப்பட்ட பகுதியில் வைக்க வேண்டும் அல்லது கட்டி வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**பரமரிப்பிற்கான அடிப்படை இயல்தரங்கள்**

- கீழ்க்கண்டவை உள்ளிட்ட அடிப்படை இயல்தரங்கள் கொண்டபடி உங்கள் செல்லப்பிராணிகளுக்கு நீங்கள் பராமரிப்பு வழங்க வேண்டும்:
  - உணவு மற்றும் நீர்
  - கொட்டகை
  - மருத்துவப் பராமரிப்பு
  - இயல்பாக நடமாட அல்லது உடற்பயிற்சி செய்வதற்கான் காலியிடம்
  - சுகாதார நிலைமைகள்
  - உடல்ரீதியான பாதுகாப்பு மற்றும் பொதுவான நலன்

இங்கு முழுப் பட்டியலைக் காணலாம்: www.brampton.ca/animalservices

**கூண்டு வைத்துப் பிடித்தல், இனப்பெருக்கமாகாமல் தடுத்தல் மற்றும் மேலாண்மைத் திட்டம் {Trap, Neuter, Release and Manage Program (TNRM)}**

- பூனைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் கொண்ட TRNM திட்டத்தில் பங்கேற்கின்ற தன்னார்வலர்கள் அங்கீகாரம் பெறுவார்கள் மற்றும் பூனைகள் கூட்டத்தைக் குறைப்பது அல்லது அழிப்பதற்கான தங்கள் இலக்குகளுக்காக ஆதரவளிக்கப்படுவார்கள்.

புதிய உப சட்டம் மற்றும் விலங்குகளுக்கான பிராம்ப்டன் சேவைகள் பற்றிய மேலும் விபரங்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/animalservices.

-30-

**ஊடகத் தொடர்பு**

பிராம்ப்டன் நகர பன்முக் கலாச்சார ஊடகம்

multiculturalmedia@brampton.ca